**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**
**வழக்கு எண்: CC – 148 /2023**

**வழக்கு சாட்சி :PW5(LW6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமொழி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | முதுநிலை குடிமை மருத்துவர், அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை , சிவகங்கை மாவட்டம். |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

1,2 எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 24th day of June 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முதுநிலை குடிமை மருத்துவராக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை ,சிவகங்கை மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.02.2022 ம் அன்று நான் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த போது அடக்காயி, க/பெ.குஞ்சான் என்பவர் தன்னை தெரிந்த நபர்கள் அடித்துவிட்டதாக சிகிச்சைக்கு வந்தார் . அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வெளிகாயங்கள் எதுவும் இல்லை. அவர் தன்னை தாககிய நபர்கள் கீழே தள்ளியதால் தனக்கு நெஞ்சுவலி இருப்பதாக கூறினார். அவருக்கு அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சை அளித்துள்ளார். அடக்காயிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **மேற்படி அடக்காயின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்சொன்ன தேதியில் அழகப்பன் என்பவரும் சிகிக்சைக்காக வந்திருந்தார். அவரை பரிசோதித்த பார்த்ததில் தன்னை தெரிந்த நபர்கள் அடித்துவிட்டதாக சிகிச்சைக்கு வந்தார் . அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது கையின் கட்டைவிரலில் சிராய்ப்பு காயம் இருந்தது. அவருக்கு அறுவை சிகிச்சை நிபுணர் சிகிச்சை அளித்துள்ளார். அழகப்பனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **மேற்படி அழகப்பனின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி</u>**

போலிசார் என்னை விசாரிக்கும் போது சிகிச்சையில் இருந்த நபருக்கு எந்த விதமான வெளிக்காயங்கள் இல்லை என்று கூறினேன் என்றால் சரிதான். நெஞ்சுவலி ஏற்பட்டதாக சிகிச்சைக்கு வந்த நபர் மிகைப்படுத்தி சொல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் ஆயுதங்களை காட்டி விசாரித்தாரா என்றால் இல்லை. பொதுவாக ஒருவரை அரிவாளால் வெட்டும் போது கைகளில் வெட்டுக் காயங்களும், எலும்பு முறிவும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு மேற்சொன்னவாறு வெட்டுக் காயங்களும், எலும்பு முறிவும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக காயங்களில் வெட்டுக்காயங்கள், சிராய்ப்பு காயங்கள் , கிளிந்த காயங்கள் மூன்று வெவ்வேறானவைகள் என்றால் சரிதான். போலிசா் என்னை விசாரிக்கும போது சிகிச்சைக்கு வந்த அழகப்பனுக்கு இடது கையில் சிராப்ய்பு காயங்கள் இருந்தது என்று கூறினேன் என்றால் சரிதான். சிராய்ப்பு காயங்கள் பெரிய வயல் வெளிகளில் தடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.